## 2026–இல் ‘இலக்கு 200 – படைப்போம் வரலாறு’ சொல்லைச் செயலாக்கிட

# 23 சார்பு அணிகளும் ஒவ்வொரு நாளும் உழைத்திட வேண்டும்!

## சென்னை தெற்கு மாவட்டக் கழக 23 சார்பு அணிகள் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**சென்னை, பிப்.17-**

**சென்னை, திருவான்மியூரில் சென்னை தெற்கு மாவட்ட பகுதி ஒன்றியக் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சரும் இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.**

**அப்போது அவர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள 23 சார்பு அணிகளும் கழகம் இன்னும் உயர உயர பறக்க சிறகாக இருந்திட வேண்டும். 2026-இல் ‘இலக்கு 200 - படைப்போம் வரலாறு’ என்ற நம் முதலமைச்சர் அவர்களின் சொல்லை செயலாக்கிட, அடுத்து வரும் ஒவ்வொரு நாளும் சார்பு அணி நிர்வாகிகள் உழைத்திட வேண்டும்’ என்றும் குறிப்பிட்டார்**

இளைஞர் அணி செயலாளர் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிகு உரை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கழகத்தின் 23 அணி நிர்வாகளான உங்களை எல்லாம் நேரில் சந்தித்து பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று காலை ஒன்பதரை மணியிலிருந்து அண்ணா அறிவாலயத்தில், கலைஞர் அரங்கத்தில் இளைஞர் அணியின் இரண்டு நாள் பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இங்கு வருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. இருந்தாலும் அனைவரும் பொறுமையாகக் காத்திருந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், அந்தப் பயிற்சிப் பாசறை ஐந்து மாதங்களுக்கு முன்பு நடந்திருக்க வேண்டும். கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்திற்கு 100 இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்துத் தர வேண்டும் என்று இளைஞர் அணிக்கு, கழகத் தலைவர் அவர்கள் அந்த வாய்ப்பை அளித்திருந்தார்.

### கழகத் தலைவர் பரிசு!

நாங்கள் 100 இல்லை, நூற்றுக்கும் அதிகமான 180 இளம் பேச்சாளர்களைக் கண்டுபிடித்து, போட்டி வைத்து அவர்களைத் தேர்ந்தெடுத்து, தலைமையிடம் ஒப்படைத்தோம். அந்த நிகழ்ச்சியில் கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு அவர்களுக்குப் பரிசு வழங்கினார்.

கழகத் தலைவர் முன்னிலையில், நான் ஒரு கோரிக்கை வைத்தேன். தலைவரும் அதை வலியுறுத்திப் பேசினார். அப்போது வந்திருந்த, அத்தனை மாவட்டச் செயலாளர்களுக்கும் ஒரு வேண்டுகோள் வைத்தேன். எங்கள் இளம் பேச்சாளர்களுக்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டும். தமிழ்நாடு முழுக்க, கூட்டங்கள் நடத்திப் பேசுவதற்கு, ஒரு மேடை அமைத்துத் தர வேண்டும் என்று, அப்பொழுதே கோரிக்கை வைத்திருந்தேன்.

இன்று காலை அவர்களிடம் கலந்துரையாடும் பொழுது அவர்கள் சொன்ன விஷயம்தான் இது. கடந்த ஐந்து மாதங்களாக, தமிழ்நாடு முழுக்க பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு கழக நிகழ்ச்சிகளுக்காக, இளைஞர் அணி தேர்ந்தெடுத்த 182 இளம் பேச்சாளர்களுக்குத் தொடர்ந்து வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் அதிகம் வாய்ப்பு வழங்கப்பட்ட மாவட்டம் எதுவென்றால், அந்த சிறப்பும் இந்த சென்னை தெற்கு மாவட்டத்திற்குத்தான். அதற்கு இந்த நேரத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மா.சுப்ரமணியன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

### கலந்துரையாடல் நிகழ்ச்சி!

மாண்புமிகு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, தலைவர் அவர்கள் எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், அங்கு இருக்கின்ற மாவட்டக் கழக நிர்வாகிகளோடு கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். அதேபோல் நான் எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், அங்கு இருக்கின்ற அனைத்து அணிகளின் நிர்வாகிகளையும் வரச்சொல்லி, புகைப்படம் எடுத்துக் கொண்டு, அவர்களுடன் சந்திப்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறேன்.

அந்த வகையில், இன்றைக்கு சென்னை தெற்கு மாவட்ட அணி நிர்வாகிகளைச் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். இந்த நிகழ்ச்சியை ஒரு மாநாடு போல பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்த, மாவட்டக் கழக செயலாளர் மா.சுப்ரமணியன் அண்ணன் அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், மீண்டும் எனது அன்பையும், நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தனிப் பெருமை உண்டு!

தமிழ்நாடு முழுக்கப் பயணிக்கிறேன். எத்தனையோ மாவட்டங்கள் இருந்தாலும், இந்த சென்னை தெற்கு மாவட்ட கழகத்திற்கு என்று ஒரு தனிப் பெருமை உண்டு. தனிச் சிறப்பு உண்டு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நின்று வென்ற சைதாப்பேட்டைத் தொகுதி, இந்த சென்னை தெற்கு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் கிட்டதட்ட 10 வருடங்களுக்கு முன்பு பொது வாழ்க்கையில் நான் காலடி எடுத்து வைக்கும் பொழுது முதன் முதலாக என்னை வைத்து ஒரு மிகப்பெரிய பொதுக்கூட்டத்தை, மிகச் சிறப்பாக கிண்டி பகுதியில் நடத்தியது இந்த சென்னை தெற்கு மாவட்டம்தான். நடத்தியவர், அண்ணன் மா.சு அண்ணன் அவர்கள்தான்.



கழகத்தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, சென்னை தெற்கு மாவட்டக் கழகத்துக்கு உட்பட்ட கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் திருவான்மியூரில் – கழக இளைஞர் அணிச் செயலாளர் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், நம் கழகத் தலைவர் அவர்களுக்கும் சென்னை தெற்கு மாவட்டம் என்றால், எப்போதுமே ஒரு தனி பாசம், தனி பிரியம் உண்டு. அதேபோல் தான் எனக்கும். அந்தப் பாச உண்வோடுதான் பிரியத்தோடுதான் உங்களையெல்லாம் சந்திக்க வருகை தந்து இருக்கிறேன்.

இன்னொரு பெருமை என்னவென்றால், கழகத் தலைவர் தமிழ்நாட்டின் மாவட்டங்களுக்குச் சென்று சார்பு அணிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. ஆனால் முதல் முதலாக தமிழ்நாட்டிலேயே, 23 அணிகள் புதிதாக நியமிக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் அவர்களின் புகைப்படத்துடன், உறுப்பினர் அட்டை வழங்கப்பட்டு கிட்டத்தட்ட 2,700 பேர் கலந்து கொள்ளக் கூடிய ஒரு சிறப்பான கூட்டம் தமிழ்நாட்டிலேயே நடத்துகின்ற முதல் மாவட்டம் இந்த சென்னை தெற்கு மாவட்டம்தான். அதற்கு மீண்டும் மாவட்ட கழக செயலாளர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கும், ஒவ்வொரு அணியை சேர்ந்த அனைத்து நிர்வாகிகளுக்கும், மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### சென்னை தி.மு.க-வின் கோட்டை!

இன்றைக்கு யாரை கேட்டாலும் சொல்வார்கள், சென்னை தி.மு.க-வின் கோட்டை என்று. சென்னை தி.மு.க-வின் கோட்டை என்றால் அதற்கு அடித்தளமாக விளங்கக் கூடியது இந்த சென்னை தெற்கு மாவட்டக் கழகம்தான் என்பதற்கு, இந்த ஒரு நிகழ்ச்சியே ஒரு சாட்சி. அதை இன்னும் அதிகமாக நிரூபிக்கின்ற வகையில் தான் கடந்த மக்களவைத் தேர்தல் முடிவுகள் இருந்தன.

நம் தென் சென்னையிலிருந்து போட்டியிட்ட கழக வேட்பாளர் அக்கா தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கு, மிகப்பெரிய வெற்றியைத் தேடி தந்தது, இந்த தென் சென்னைதான். கிட்டத்தட்ட இரண்டு லட்சத்து 27 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கிறார் என்றால், அதற்கு வந்திருக்கின்ற நீங்கள்தான் மிக முக்கிய காரணம்.

இன்னும் சொல்லப்போனால், அவரை எதிர்த்து நின்ற அ.தி.மு.க வேட்பாளர் டெபாசிட் கூட கிடைக்காத அளவிற்கு ஒரு வெற்றியை தேடி தந்திருக்கிறீர்கள். உங்கள் உழைப்பிற்கு அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடாளுமன்ற தேர்தல் முடிந்து விட்டது. அடுத்து வர இருக்கின்ற 2026- சட்டமன்ற தேர்தல். சட்டமன்ற தேர்தலுக்கான பணிகளை முதன்முதலில் தொடங்கிய இயக்கம் என்றால், அது நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு முன்பே, தலைவர் அவர்கள் சட்டமன்ற தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க, ஒரு ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்துக் கொடுத்தார்கள். அந்தக் குழுவில் நானும், அண்ணன் ஆர்.எஸ்.பாரதி அவர்களும் இருக்கிறோம்.

களத்தில் தேர்தல் பணிகளை மேற்கொள்ள தொகுதி பார்வையாளர்களையும் நம் தலைவர் அவர்கள் நியமித்தார். இதன் அடுத்த கட்டமாகத்தான், தலைவர் அவர்கள் இந்த கூட்டங்களை நடத்த உத்தரவிட்டிருக்கிறார். இந்திய ஒன்றியத்திலேயே வேறு எந்த இயக்கத்திற்கும் இல்லாத ஒரு சிறப்பு என்னவென்றால் அது நம் கழகத்திற்குதான் இருக்கிறது. அவைதான் கழகத்தின் 23 சார்பு அணிகள்.

### கழகம் உயரே உயரே பறக்கும்!

`ஐ.டி.விங்’, `யூத் விங்’, `ஸ்போர்ட்ஸ் விங்’ என்று பல அணிகளை அழைக்கிறோம். ஆங்கிலத்தில் `விங்ஸ்’ என்று சொல்வார்கள். `விங்ஸ்’ என்றால் தமிழில் `சிறகுகள்’. இங்கு இருக்கின்ற ஒவ்வொரு விங்கும் கழகம் உயர உயர பறக்க சிறகுகளாக இருந்து உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கழகத்திற்கு எப்படி ஒரு வரலாறு இருக்கிறதோ, அதேபோல் ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. மாணவர் அணியை என்று எடுத்துக் கொண்டால், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை, மாணவர் அணி இல்லாமல் நாம் நினைத்துக் கூட பார்க்க முடியாது. அதேபோல் தமிழ்நாட்டில் இளைஞர்களைக் கொள்கைப்படுத்தியது யார் என்று பார்த்தீர்கள் என்றால், நம் இளைஞர் அணி. மகளிர் அணி, தொழில்நுட்ப அணி, சிறுபான்மையினர் அணி என்று ஒவ்வொரு அணிக்கும் இப்படி ஒரு தனிச் சிறப்பு உண்டு.

இன்னும் சொல்லப்போனால், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இளைஞர் அணியில் இருந்து வந்தவர்தான். நம் கழகத்தின் பொதுச்செயலாளர் அவர்கள் மாணவர் அணியில் இருந்து உழைத்து முன்னுக்கு வந்தவர். நம் அமைச்சர், உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்களும், நம் இளைஞர் அணியில் இருந்து உழைத்து வந்தவர்தான்.

மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர்கள் அணி என்று பல்வேறு அணிகளில் இருந்து அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என்று தன் உழைப்பால் பல்வேறு அணிகளில் இருந்து வந்திருக்கிறார்கள். சார்பு அணிகளை, கழகத்தின் முக்கிய பொறுப்பில் பணியாற்றுவதற்கான ஒரு பயிற்சி களமாகத்தான் நாம் பார்க்க வேண்டும். அதனால்தான் சார்பு அணிகளுக்கான முக்கியத்துவம் எப்பொழுதுமே கழகத்தில் இருந்து கொண்டிருக்கும்.

### இரண்டு நாட்கள் பயிற்சி முகாம்!

இன்று கூட பார்த்தீர்கள் என்றால், நம் இளைஞர் அணி இளம் பேச்சாளர்களுக்கு `இரண்டு நாட்கள் பயிற்சி முகாம்’ நடத்திக் கொண்டிருக்கிறோம். விளையாட்டு மேம்பாட்டு அணி பார்த்தீர்கள் என்றால், தலைவரின் பிறந்த நாளை முன்னிட்டு, இரண்டு நாட்கள் மிகச் சிறப்பான ஒரு கிரிக்கெட் போட்டியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட அதில் 18 அணிகள் கலந்து கொண்டிருக்கின்றன. இப்படி ஒவ்வொரு அணியும் களத்தில் இறங்கி அவர்களின் பணிகளைச் சிறப்பாக செய்து கொண்டிருக்கின்றன.

ஆகவே, சார்பு அணிகள், நாம் சார்பு அணிகள் தானே என்று சாதாரணமாக இருந்து விடக் கூடாது.

தலைமைக் கழகம் உங்களைச் சார்ந்து இருப்பதால்தான், உங்களுக்குப் பெயர் `சார்பு அணி’ என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். உங்கள் ஒவ்வொருவரின் வாயிலாகவும் குறைந்தது, ஒரு 100, 150 வாக்குகள் உங்களின் கைகளில் இருக்கின்றன என்றால், நிச்சயமாக உங்களின் அவசியத்தை யாராலும் தவிர்க்க முடியாது,தடுக்க முடியாது.

ஆகவே, நான்கு பூத், ஐந்து பூத் எங்களின் பொறுப்பு என்று நீங்கள் எடுத்துக் கொண்டு தீவிரமாக கவனம் செலுத்தி அதில் களப்பணி ஆற்ற வேண்டும். உங்களின் பணியை களத்தில் சரியாக செய்துகொண்டு வந்தீர்கள் என்றால், நம் தலைவர் அவர்கள் நிச்சயமாக உரிய நேரத்தில் அதற்கான அதிகாரத்தை உங்களுக்குக் கொடுப்பார்.

கழகம் ஆட்சி அமைந்த இந்த நான்கு வருடத்தில் அரசுத் திட்டங்களை மக்கள் பணிகளை, நம் அரசு செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டம், ஒவ்வொரு தாலூகா, ஒவ்வொரு ஊர், ஒவ்வொரு வீடு, ஏன் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் தேவையான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள், ஒவ்வொரு நாளும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். உதாரணத்திற்கு ஒரு சில திட்டங்களை மட்டும் இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

தலைவர் அவர்கள் முதலமைச்சராகி இட்ட முதல் கையெழுத்து, மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயண திட்டம். நான்கு வருடங்களில் கிட்டத்தட்ட 620 கோடிப் பயணங்களை, மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த மகளிர் விடியல் திட்டத்தின் வாயிலாக, ஒவ்வொரு மகளிரும், மாதம் 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

### உயர்கல்வியில் பெண்கள்!

அதேபோல் பெண்கள் படிக்க வேண்டும். பள்ளிக்கல்வி படித்தால் மட்டும் போதாது, உயர் கல்வி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து, உயர் கல்வி படிக்க எந்த கல்லூரிக்குச் சென்று படித்தாலும், மகளிருக்கு புதுமைப்பெண் என்ற திட்டத்தின் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல, மாணவர்களுக்கும் `தமிழ்ப்புதல்வன்’ என்ற திட்டத்தின் மூலமாக மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதுவரைக்கும் 8 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் வாயிலாக பயனடைந்து இருக்கிறார்கள்.

### காலை சிற்றுண்டித் திட்டம்!

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு மிகச் சிறப்பான திட்டம் என்றால், முதலமைச்சர் காலை உணவு திட்டம். ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 20 லட்சம் குழந்தைகள் இந்தத் திட்டத்தால் பயன்பெற்று வருகிறார்கள். அதேபோல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறது நம் கழக அரசு.

தமிழ்நாட்டில் இருக்கின்ற குக்கிராமங்களில் யார் வீட்டிற்கு சென்று பார்த்தாலும், அங்கு நம் அரசின் பயனாளிகள் ஒருவராவது இருப்பார்கள். உங்கள் அனைவருக்கும் தெரியும்.

### பா.ஜ.க. அரசு ஓரவஞ்சனை!

பத்து நாட்களுக்கு முன்பு, ஒன்றிய அரசு பட்ஜெட் தாக்கல் செய்தது. பட்ஜெட்டில் நம் நிலைமை என்ன? தமிழ்நாட்டிற்கு ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை, ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஒரு ரூபாய் ஒதுக்காதது மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பெயரைக்கூட தவிர்த்து இருக்கிறார்கள்.

அந்த அளவிற்கு ஒரு மோசமான பட்ஜெட்டை, ஒன்றிய அரசு தாக்கல் செய்தது. நான் கூட, இது `யூனியன் பட்ஜெட்’ இல்லை, `யூஸ்லெஸ் பட்ஜெட்’ என்று சொன்னேன். ஒன்றிய அரசிடம் இருந்து நமக்கு வர வேண்டிய நிதியையும் அவர்கள் கொடுக்கவில்லை. நமக்கு வர வேண்டிய நிதியை உத்திரபிரதேசம், பீகார் என்று பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்றைக்குகூட ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் சொல்லி இருக்கிறார். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டிய 2,150 கோடி ரூபாயை குஜராத்திற்கும், உத்தர பிரதேசத்திற்கும் பிரித்து கொடுத்து விடுவோம் என்று சொல்லி இருக்கிறார். ஒன்றிய அரசு நம் தமிழக அரசை மாற்றான்தாய் மனப்பான்மையோடுதான் பார்த்துக் கொண்டிருக்கிறது. நம்மைத்தான் இப்படி புறக்கணிக்கிறார்கள் என்று பார்த்தால், அவர்களின் வட இந்திய மாநிலத்திற்கு ஏதாவது உருப்படியாக செய்திருக்கிறார்களா என்றால் அதுவும் கிடையாது.

இன்றைக்கு பத்திரிகைகள், தொலைக்காட்சி செய்திகளில் பார்த்திருப்பீர்கள். அமெரிக்காவில் என்ன நடக்கிறது. இந்தியர்களை கை, கால்களில் விலங்கு போட்டு, கட்டிபோட்டு விமானத்தில் அங்கிருந்து இங்கு கொண்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிற்கு அனுப்பி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் எதிர்த்து, கேள்வி கேட்கின்ற துணிச்சல் இல்லாத பிரதமர்தான் நரேந்திர மோடி அவர்கள். அவரைப் பார்த்துத்தான் இன்று சங்கிகள் கதை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். மோடியை பார்த்து அமெரிக்கா பயந்து விட்டது. ஐரோப்பா நடுங்குகிறது என்று கலர் கலராக கதை விடுவார்கள்.

### 8 முறை தமிழ்நாட்டுக்கு வந்தார்!

தேர்தலுக்கு முன்பு நரேந்திர மோடி அவர்கள் கிட்டத்தட்ட எட்டு முறை தமிழ்நாட்டுக்கு வந்தார். ஆனால், தேர்தல் முடிந்த பிறகு ஒரு தடவை வந்தாரா என்று பார்த்தீர்கள் என்றால், தமிழ்நாட்டுப் பக்கம் தலைவைத்துக்கூடப் படுக்கவில்லை. அதனால்தான் தமிழ்நாட்டிற்கு ஒரு ரூபாய் கூட நிதி ஒதுக்கவில்லை. அவர்தான் அப்படி என்று பார்த்தீர்கள் என்றால், இன்னொருவரும் அப்படி இருக்கிறார். அவர்தான் இங்கு இருக்கின்ற ஆளுநர்.

தேர்தல் வருவதற்கு இன்னும் ஒரு வருடம் இருக்கிறது. ஆனால், தேர்தல் வேலைகளை பார்த்தீர்கள் என்றால் நம்மைவிட அதிகமாக நமக்குப் போட்டி போட்டுக் கொண்டு வேலை செய்வது யார் என்று பார்த்தீர்கள் என்றால் ஆளுநர் அவர்கள்தான். சமீபத்தில், நம் தலைவர் அவர்கள் கூட, பிரதமர் அவர்களுக்கும் ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்களுக்கும் கோரிக்கை வைத்தார். சட்டமன்றத் தேர்தல் முடிகின்ற வரைக்கும் எங்கள் ஆளுநரை தயவு செய்து மாற்றி விடாதீர்கள்.

### வலிமைமிக்க தலைவர்!

எங்களை விட எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சாரத்தை இங்கு இருக்கின்ற ஆளுநர்தான் மக்களிடம் அதிகமாக எடுத்துக் கொண்டு போய் சேர்த்துக் கொண்டிருக்கிறார். தயவு செய்து அவரை மாற்றி விடாதீர்கள் என்று தலைவர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார். ஆகவே இப்படிப்பட்ட சூழலில் தான் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நம் தமிழகத்தை வழி நடத்திக் கொண்டு இருக்கிறார். இன்று ஆட்சியிலும் சரி, கட்சியிலும் சரி இந்தியாவிலேயே மிகப்பெரிய வலிமையோடு வழி நடத்துகின்ற தலைவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

### குழப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர்!

நம் எதிர்க்கட்சியின் நிலைமை என்னவென்று உங்களுக்கே தெரியும். எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இன்றைக்கு பல குழப்பத்தில் மூழ்கி போய் இருக்கிறார். ஒன்றிய அரசு பட்ஜெட்டைக் கண்டித்து, நாம் தமிழ்நாடு முழுக்க கண்டன பொதுக்கூட்டம் நடத்தினோம். ஆனால், எதிர்க்கட்சி தலைவரிடம் பத்திரிகையாளர்கள் சென்று கேட்கும் பொழுது என்ன சொன்னார். அந்த பட்ஜெட்டை பாராட்டினாரா, இல்லை திட்டினாரா என்று தெரியவில்லை. அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? `மாயாஜால பட்ஜெட்’ என்று சொன்னார். யாருக்குமே புரியக் கூடாதாம். அதாவது `மேஜிக்’ என்று சொல்லி விட்டார். ஏனென்றால், பாராட்டினால் தமிழ்நாட்டு மக்கள் ரெய்டு விடுவார்கள், திட்டினால் ஒன்றிய அரசு ஐ.டி ரெய்டு விட்டுவிடும். அந்த பயத்தில்தான் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், ஒன்றிய அரசின் பட்ஜெட்டை ஒரு மாயாஜால பட்ஜெட் என்று சொன்னார்.

அடுத்து பதவியைத் தக்க வைத்துக்கொள்ள இன்றைக்கு யார் காலைப் பிடிப்பது என்று காலை தேடிக் கொண்டிருக்கிறார். நாம் இன்றைக்கு 23 அணிகளுக்கு அறிமுக கூட்டம் நடத்தி இருக்கிறோம். ஆனால் அ.தி.மு.க-வின் நிலைமை என்ன. அங்கேயும் பல அணிகள் இருக்கின்றன. சசிகலா அணி, டி.டி.வி. அணி,

தொடர்ச்சி 5ஆம் பக்கம்